**வருவாய் ஈட்டும் தாய் தந்தை விபத்தில் இறந்தால் பாதிக்கப்பட்ட மாணவ / மாணவியருக்கு நிதி ரூ.50000 லிருந்து ரூ.75000 உயர்த்தி வழங்குதல்**

**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்டுகின்ற மாணவ / மாணவியர் ஒவ்வொருவருக்கும் தற்போது வழங்கப்படும் ரூ.50000 லிருந்து ரூ.75000 நிதி உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி(பக5(2))த்துறை

அரசாணை(நிலை) எண் 195 நாள் 27–11–2014

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை(நிலை) எண் 39 பள்ளிக்கல்வி துறைநாள் 30–03–2005
2. அரசாணை(நிலை) எண் 127 பள்ளிக்கல்வி துறைநாள் 01–07–2005
3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110 ன் கீழ் 30–07–2014 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பு

**ஆணை**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவ மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற அந்த மாணவ/ மாணவியர் ஒவ்வொருவருக்கும் ரூ.50000 நிதி வழங்கப்படும் என்றும் இந்த நிதி அரசு நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாக செலுத்தப்பட்டு, அதில் இருந்து கிடைக்கின்ற வட்டித் தொகை மற்றும் அதன்முதிர்வு தொகை ஆகியவை அந்த மாணவ மாணவியரின் கல்விச் செலவிற்காகவும் அவர்களது பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்படும் என்றும் ஆணை வெளியிடப்பட்டது. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்த தேவையான நிதி ஒதுக்கீடும், அதற்குரிய வழிகாட்டு நெறிமுறைகளும் வகுக்கப்படடு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110 ன் கீழ் 30–07–2014 அன்று பின்வரும் அறிவிப்பினை சட்டமன்றப் பேரவையில் வெளியிட்டுள்ளார்கள்.

வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ இன்மை காரணமாக பள்ளியில் கல்வி கற்கும் அவர்களது குழந்தைகள் கல்வியை தொடர்ந்து கற்க இயலாத நிலை ஏற்படும் சமயத்தில் அவர்களது குழந்தைகள் தங்களது கல்வியை தொடர்ந்து கல்வி கற்கும் வகையில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ/ மாணவியர் ஒவ்வொருவருக்கும் ரூ.

50000 ரூபாய் ஐம்பதாயிரம் நிதி வழங்கும் திட்டம் என்னால் 2005 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் தொகை இனி 75000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்நிதி அரசு நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாகச் செலத்தப்பட்டு அதில் இருந்து கிடைகின்ற வட்டித்தொகை மற்றும் அதன் முதிர்வுத் தொகை ஆகியவை மாணவ / மாணவயிரின் கல்விச் செலவுக்காகவும் மற்றும் பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்படும். இத்திட்டத்தினால் அரசுக்கு 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் கூடுதலாக செலவு ஏற்படும்.

3. மேலே பத்தி 2 இல் காணும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்த கீழ்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது

1) வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ இன்மை காரணமாக பள்ளியில் கல்வி கற்கும் அவர்களது குழந்தைகள் கல்வியை தொடர்ந்து கற்க இயலாத நிலை ஏற்படும் சமயத்தில் அவர்களது குழந்தைகள் தங்களது கல்வியை தொடந்து கல்வி கற்கும் வகையில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ /மாணவியர் ஒவ்வொருவருக்கும் நிதி வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ. 50000 தொகை இனி ரூ. 75000 ( ரூபாய் எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) உயர்த்தி வழங்கப்படுகிறது.

2.இந்நிதி அரசு நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாகச் செலத்தப்பட்டு அதில் இருந்து கிடைக்கின்ற வட்டித்தொகை மற்றும் அதன் முதிர்வுத் தொகை ஆகியவை மாணவ/ மாணவயிரின் கல்விச் செலவுக்காகவும் மற்றும் பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்பட வேண்டும்.

4. இத்திட்டத்தினை செயல்படுத்திட தேவையான நிதியினை வரவு – செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்திட ஏதுவாக உரிய கருத்துருவினை நிதித்துறைக்கு சமர்ப்பிக்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.5 இவ்வரசாணை நிதிதுறையின்அ.சா.எண 64493/Edn-II/2014 நாள் 26–11–2004 ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி )

த. சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்.